C(5)
அ4
20/6/22

அனுப்புநர்
திருமதி.ஆர்.ஹேமலதா, எம்.ஏ.,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
சென்னை –01.

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்,
சென்னை பெண்கள் மாகாண
மேல்நிலைப்பள்ளி வளாகம்,
எழும்பூர், சென்னை – 08.

ந.க.எண். ய11 /1766/2022 நாள்:13.06.2022

அய்யா / அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் – கல்வி உதவித்தொகை – பிரிமெட்ரிக் (IX-X) மற்றும் சுகாதார தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டம் கல்வி உதவித்தொகை திட்டம் (I-X) – ஒரே கல்வி உதவித்தொகை திட்டமாக நடைமுறைப்படுத்துதல் – தொடர்பாக.

பார்வை: சென்னை ஆதிதிராவிடர் நல ஆணையரக கடித ந.க.எண். ஜே2 /8246 /2022, நாள்: 05.05.2022.

*******

ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம், அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் தகுதியுள்ள அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வி உதவித்தொகை திட்டம் 2016–2017 கல்வியாண்டு முதல் தேசிய தகவல் மையம் மூலம் இணையவழியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் கல்வி உதவித்தொகையானது மாணவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. வருமான வரம்பு 2.5 இலட்சம் என வரையறுக்கப்பட்டுள்ளது.

சுகாதார தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டமானது வருமான வரம்பு, இன வேறுபாடு இன்றி தகுதியுள்ள அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் பார்வையில் கண்டுள்ள சென்னை ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்களின் கடிதத்தில் திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் 2021–22 ஆம் கல்வியாண்டு முதல், ஒன்றிய அரசால் செயல்படுத்தப்படும் மேற்கூறிய இரு கல்வி உதவித்தொகை திட்டங்களையும் ஒன்றிணைத்து "ஆதிதிராவிடர் மற்றும் பிற மாணவர்களுக்கான பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம்" என்ற பெயரில் ஒரே கல்வி உதவித்தொகை திட்டமாக செயல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வழிகாட்டு நெறிமுறைகள்

பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில் ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள மாற்றங்களின் அடிப்படையில் தற்போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

1. இரண்டு திட்டங்களும் ஒரே திட்டமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதை அனைத்து பள்ளிகள், மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு தெரிவித்தல் வேண்டும்.
2. இரண்டு திட்டங்களில் ஏதேனும் ஒரு திட்டத்தில் மட்டுமே விண்ணப்பிக்க மாணாக்கர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.
3. இத்திட்டம் இரண்டு கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
    1. 9 மற்றும் 10 வகுப்பு பயிலும் ஆதிதிராவிட மாணவர்கள்.
    2. முதல் 10 வகுப்பு வரை பயிலும் சுகாதார தொழில் புரிவோரின் குழந்தைகள் (அனைத்து பிரிவினருக்கும்).
4. பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் இணைய வழியில் விண்ணப்பிக்க வேண்டும்.

    சுகாதார தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் விடுதியில் தங்கிப்பயிலும் 3 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களும் விடுதியில் அல்லாமல் பெற்றோர்/பாதுகாவலருடன் தங்கிப்பயிலும் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து இன மாணவர்களும் இணைய வழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
5. ஆதார் எண் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் அனைத்து மாணாக்கர்களுக்கும் ஆதார் எண் பெற விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட வேண்டும்.
6. ஆதார் எண் இணைக்கப்பட்ட வங்கி கணக்கிற்கே கல்வி உதவித்தொகை விடுவிக்கப்படும் என்பதால் மாணாக்கர்களின் வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
7. மாற்றம் செய்யப்பட்ட கல்வி உதவித்தொகை விவரத்தினை தெரிவிக்க வேண்டும்.
8. தொலைபேசி எண் ஆதார் எண்ணுடன் இணைக்க அறிவுறுத்த வேண்டும்.
9. முதற்கட்டமாக National Scholarship Portal (NSP) -ல் மாணாக்கர்களின் விவரங்கள் பதிவு செய்த பின்னரே கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க முடியும் என்பதைத் தெரிவிக்க வேண்டும். (NSP-ல் பதிவு செய்வது தொடர்பான விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்).
10. இத்திட்டங்கள் 60:40 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படும்.
11. 2022-23 ஆம் கல்வியாண்டு முதல் மாணாக்கர்களே இணைய வழியில் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க வேண்டும். மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க உதவும் வகையில் Nodal Officer நியமிக்க வேண்டும்.

12. ஏழை ஆதிதிராவிடர் குடும்பங்கள் தொடர்பான விவரங்களை சேகரித்து, சமூக பொருளாதார ஜாதிவாரி கணக்கெடுப்பு -2011ன் அடிப்படையில் மிகுந்த ஏழைக் குடும்பங்களை சேர்ந்த மாணாக்கர்களுக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும்.
13. மாணாக்கர்களால், விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் முதற்கட்டமாக பள்ளிகள் (L1) அளவில் சரிபார்த்து மாணவட்டத்திற்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

பள்ளிகளில் இருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மாவட்ட அளவில் (L2) சரிபார்த்து ஆணையரகத்திற்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

14. பரிந்துரைக்கப்படும் விண்ணப்பங்களுக்கு கல்வி உதவித்தொகை ஒன்றிய அரசின் பங்கு 60% நேரிடையாக ஒன்றிய அரசால் விடுவிக்கப்படும். மாநில அரசின் பங்கு 40% மாநில அரசால் வழங்கப்படும் என்ற விவரத்தினை அனைத்து பள்ளிகளும் தெரிவிக்க வேண்டும்.

பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் மற்றும் சுகாதார தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித்தொகை மற்றும் தற்போது மாற்றம் செய்யப்பட்ட கல்வி உதவித்தொகை விவரம் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டக்கூறு | விடுதி/விடுதி அல்லாத மாணவர்கள் | தற்போது வழங்கப்படும் கல்வி உதவித் தொகை (ஆண்டுக்கு) | | | மாற்றம் செய்யப்பட்ட தொகை (ஆண்டுக்கு) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பராமரிப்பு படி | தனி மானியம் | மொத்தம் | பராமரிப்புபடி (அனைத்து படிகள் உட்பட) | |
| 1. | IX-X பிரிமெட்ரிக் | விடுதி | 5250 | 1000 | 6250 | 7000 | கூடுதல் ரூ.750 |
| | | விடுதி அல்லாதோர் | 2250 | 750 | 3000 | 3500 | கூடுதல் ரூ.500 |
| 2. | I-X சுகாதார தொழில் புரிவோரின் குழந்தைகள் | விடுதி (III-X) | 7000 | 1000 | 8000 | 8000 | - |
| | | விடுதி அல்லாதோர் (I-X) | 2250 | 750 | 3000 | 3500 | கூடுதல் ரூ.500 |

மேற்காணும் அட்டவணையின்படி மாற்றியமைக்கப்பட்ட உதவித்தொகை 2022-2023 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையில் கூடுதலாக 10% வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திருத்தியமைக்கப்பட்ட பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் வழகாட்டு நெறிமுறைகளை அனைத்து பள்ளிகளுக்கு தெரிவிக்குமாறு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு : பார்வையில் காணும் கடிதம்.

13/6/2022

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
சென்னை.

13/06/2022

நகல்

1. ஆணையர்,
   ஆதிதிராவிடர் நல ஆணையரகம்,
   சேப்பாக்கம், சென்னை–05 – தகவலுக்காகப் பணிந்தனுப்படுகிறது.
2. கல்வி அலுவலர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி
   சென்னை–03 – தகவலுக்காகப் அனுப்படுகிறது.
3. மாவட்ட தொடக்க கல்வி அலுவலர்,
   டி.பி.ஐ.வளாகம்,
   சென்னை – 06–தகவலுக்காகப் பணிந்தனுப்படுகிறது.
4. அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள்,
   சென்னை மாவட்டம்–தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டும்

22/6/22